விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 232 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 22 புதன்கிழமை (07.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கந்தர்மடத்தில் வீதி விபத்து; இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் 15

## மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடாத்துதல்

### சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில்நடத்தி மாகாண சபைகளை மீள இயங்க வைப்பதற்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்த தனிநபர் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்பில் விவாதம் இன்றி 15

## யாழ் - காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு

### 62 மில்லியன் டொலர்கள் இந்தியா மானியமாக வழங்குகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்காக 62 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்க இந்தியா முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் 15

## தேர்தல் தொடர்பில் 99 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 99 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலேயே குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு 15

# மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



(புதுடில்லி)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கே.அண்ணாமலை மற்றும் தமிழக மீனவ சங்கத்தினர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது, இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய 02

### வவுனியாவில் கிணற்றிலிருந்து

## இளம் ஆசிரியர் சடலமாக மீட்பு



(வவுனியா)

வவுனியா, நெளுக்குளம், பாலாமைக்கல் பகுதியில் உள்ள தோட்டக்காணிக் கிணற்றில் இருந்து ஆசிரியர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நெளுக் 15

## பொது வேட்பாளர் இன்று அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் யார் என இன்று அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவு 02

## 22 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னாரை அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 15

## மன்னாரில் பட்டதாரியான இளம் தாய் உயிரிழப்பு

### விசாரணை நிறைவில் தவறிழைத்தவர்கள் அடையாளம்



(மன்னார்)

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில், பட்டதாரியான இளம் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதித் தேர்தலில் கொள்கைகளுக்கு இணங்கியே செயற்படுவோம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதித் தேர்தலில் கொள்கைகளுக்கு இணங்கியே செயற்படுவோம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முற்பகல் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுன மக்கள் ஆதரவு உள்ள பலம்மிக்க ஒருகட்சியாகும். கட்சித்தாவல்கள் இடம்பெற்றாலும் மக்களை மாற்ற முடியாது.

கட்சி என்ற ரீதியில் நாம் கொள்கைகளுக்கு இணங்கியே செயற்படுவோம். அரசியலில் நீண்டகால அனுபவம் கொண்ட எமது கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சரியான தீர்மானத்தினையே மேற்கொள்வார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்கள் ஆதரவினால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கட்சியாகும். எனவே நாட்டு மக்கள் மத்தியில் இன்று குழப்பம் ஏற்படுத்தும் வகையில் பலர் செயற்படுகின்றனர்.

பொதுஜன பெரமுனவுக்குள் பாரிய பிளவு காணப்படுவதாகவும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். நாம் ஒரு விடயத்தை தெரிவித்து கொள்கின்றோம். தேர்தலில் எமக்கு எவரும் சவால் அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நாமல் ராஜபக்ஷவின் பெயரை அறிவிப்பதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தம்மிக்க பெரேராவை வேட்பாளராக களமிறக்க அக்கட்சி தீர்மானித்திருந்த நிலையில் அவர் தேர்தலில் போட்டியிட பின்வாங்கியுள்ளதால் நாமல் ராஜபக்ஷவை களமிறக்குவதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வர்த்தகர் தம்மிக்க பெரேரா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகியுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களிற்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அவர் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவிற்கு தெரிவித்துள்ளார். (ம-7)

# 18 வயது இளைஞன் புதுக்குடியிருப்பில் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் 15 வயதுடைய சிறுமியினை தகாத முறைக்கு உட்படுத்திய 18 வயது இளைஞனை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு தேராவில் கிராமத்தில் 18 வயதுடைய இளைஞன் ஒருவர் தனது வீட்டில் 15 வயதும் 10 மாதங்களும் நிரம்பிய சிறுமி ஒருவரை அழைத்துவந்து தங்கவைத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய சிறுமி மீட்கப்பட்டு, இளைஞனையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுமி பாட்டியுடன் வாழ்ந்து வந்த நிலையில் அந்த இளைஞனுடன் ஏற்பட்ட காதல் காரணமாக வீட்டிற்கு அழைத்து வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்டவைத்திய அதிகாரியிடம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அத்தோடு சிறுமியுடன் உறவுகொண்ட இளைஞனை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இளைஞனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.(ம-7)

## மீனவர்...

மீனவர்களை விடுவித்தல், இலங்கை-இந்திய பிரதிநிதிகள் சந்திப்பை ஏற்படுத்தல், மீனவர்களுக்கான இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளைத் தமிழக மீனவர்கள் முன்வைத்திருந்தனர்.

அது தொடர்பில் ஆராய்ந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய மற்றும் இலங்கை தரப்பில் தலா 4 அதிகாரிகளுடன் கூடிய குழுவொன்றின் ஊடாக மீனவ பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.


இந்த இருதரப்பு ஆய்வுக் குழு விரைவில் கூட இருக்கிறது. அப்போது அனைத்து பிரச்சினைகளும் சுமுகமாகத் தீர்க்கப்படும். அதில் தங்களது பிரச்சினைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அத்துடன், மீனவர்களின் குறைகளுக்கு உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.(ம-7)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்

**(ஓய்வு நிலை அதிபர்)**



பிறப்பு 19.03.1933 இறப்பு 06.08.2024

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (ஓய்வு நிலை அதிபர்) அவர்கள் நேற்று 06.08.2024 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கிரிதரன்(தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), சசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், வன்னியசிங்கம், நாகராசா மற்றும் இராஜேஸ்வரி, தங்கரத்தினம் ஆகியோரினது மூத்த சகோதரனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், மாணிக்கவாசகர், பரமேஸ்வரி மற்றும் யோகநாதர், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சித்திரா(ஆசிரியர் - யா/ இணுவில் மத்திய கல்லூரி) மற்றும் காலஞ்சென்ற அனுரதி(பிரதேச சபை - கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுசன், அபினா, கிருசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னார் யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை, நு/ கோல்புறாக் தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபராகவும் க/ புசல்லாவை சரஸ்வதி வித்தியாலயம், க/புசல்லாவை பரிதிருத்துவக் கல்லூரி, பேராதனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளின் ஆசிரியராகவும் யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நீண்டநாள் ஆசிரியராகவும் முன்னாள் கனிஷ்ட பிரிவு அதிபராகவும் சிறப்புக் கடமையாற்றியவர் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் 07.08.2024 புதன்கிழமை இன்று சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

077 735 0827
077 742 7207

தகவல்:
குடும்பத்தினர்
(1647)

# தேர்தலை புறக்கணிக்குக யாழில் துண்டுப்பிரசுரம்



ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க கோரி துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்வுவொன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும், திருநெல்வேலி புறநகர் பகுதிகள் ஆகியவற்றில் பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரத்தினை வழங்கி ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கூறினர்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் நிறுத்துவதோ அல்லது பெரும்பான்மை இனத்தவர் ஒருவரை தெரிவு செய்வதில் எவ்வித பயனும் இல்லை என தெரிவித்த செல்வராஜா கஜேந்திரன் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பது தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு தீர்வு எனவும் இதன்போது சுட்டிக் காட்டியமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

## பொது...

செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தாத செய்திகள் வெளியாகி உள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அரியநேந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபை மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவை இணைந்து உருவாக்கிய தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தெரிவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

தமிழ் மக்கள் பொதுச்சபை கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒருவரை நிறுத்தவேண்டும் என்று தமிழ் மக்கள் பொதுச்சபை உருவாக்க காலத்திலிருந்தே தீர்மானித்திருந்தது.

இதனடிப்படையில் பலரது பெயர்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்காக முன்மொழியப்பட்டிருந்தனர்.

அவர்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான வைப்பு வட்டி வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி வீதத்தை 10% ஆக உயர்த்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டுள்ள அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, தற்போது காணப்படும் 8.5% வட்டி வீதம் 10 % ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

பல சிரேஷ்ட பிரஜைகளின் முக்கிய வருமானம் அவர்களின் ஓய்வுக் காலத்தின் போது வழங்கப்படும் பணிக்கொடை அல்லது வங்கி வைப்புத் தொகை போன்றவற்றில் பெறப்படும் நிலையான வட்டியே ஆகும்.

இதனால் நாட்டிலுள்ள சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புத்தொகைக்கான வட்டி வீதத்தைத் திருத்துவதற்கான தீர்வு யோசனை அடங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புத்தொகைக்கான 8.5% வட்டி வீதத்தை 10% ஆக உயர்த்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கட்டுப்பணத்தை செலுத்தினார் அநுர

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிடும் அநுரகுமார திஸாநாயக்கவிற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

அதன்படி விஜித ஹேரத், ஹரிணி அமரசூரிய, சட்டத்தரணி சுனில் வதகல உள்ளிட்ட குழுவினர் தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சென்று பணத்தை வைப்பிலிட்டுள்ளனர்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரையில் 17 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதனிடையே அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவது குறித்து அமைச்சுகளின் செயலாளர்களுக்குத் தெளிவுப்படுத்தவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர் எல் ஏ எம் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன் அரச சொத்துகள் தொடர்பான பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

15 ஆவது நினைவாண்டும்

35 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்

மலர்வு 07 . 08 . 1989



உதிர்வு 19 . 01 . 2009

அமரர்.

## சிறினிவாசன் சுபோதினி

அன்பின் சொல்லால் விளைந்த எம் செல்ல மகளே
உன்னைப் பறி கொடுத்து
நாம் படும் பாட்டை நீ அறிவாயோ?
பேச்சில் கனிவு காட்டி குணத்தில் தெய்வமாய் நின்றாயே
உன் செல்லச் சிரிப்பைக் காண
எம் கண்கள் தவம் கிடக்கிறது
மறுபடி வந்துவிடு எங்களிடம்

4 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (1638)

அன்புடன்: அம்மா, அப்பா,
தம்பி, அண்ணாமார்.

"பொன்னகவை காணும் தீபஜோதி"
கூவில்

## தீபஜோதி சனசமூக நிலையத்தின்

50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவினை முன்னிட்டு

தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும்

## மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலை பண்பாட்டு பெருவிழாவும்- 2024

ஐந்தாம் நாள் நிகழ்வு

இரண்டாம் நாள் விளையாட்டுப் போட்டி

காலம்: 07.08.2024 புதன்கிழமை
நேரம்: பி.ப 3.00 மணி
இடம்: தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானம் (பருத்தித்துறை)

**தலைமை**

திரு. பொ. செல்வகிருஸ்ணன்
(தலைவர், தீபஜோதி சனசமூக நிலையம்)

**பிரதம விருந்தினர்**

தீபவாரிதி திரு.வ.தவராசா
(தலைவர் - தீபஜோதி முத்தமிழ் கலாமன்றம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

தீபவாரிதி திரு. ந. கணேசமூர்த்தி
(தீபஜோதி சனசமூக நிலைய மூத்த அங்கத்தவர்)

தீபவாரிதி திரு. மா. இரத்தினர்
(தீபஜோதி சனசமூக நிலைய மூத்த அங்கத்தவர்)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு. பெ. ஆறுமுகநாதன்
(இணைச்செயலாளர், தீபஜோதி சனசமூக நிலையம்)

திரு. ந. கணேசலிங்கம்
(பொருளாளர், தீபஜோதி சனசமூக நிலையம்)

**நிகழ்ச்சி நிரல்**

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- இல்ல விளையாட்டுக்கள்
- தலைமையுரை
- கௌரவ விருந்தினர்கள் உரை
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தீபஜோதி சனசமூக நிலையம்,
தீபஜோதி விளையாட்டுக் கழகம்,
தீபஜோதி முத்தமிழ் கலாமன்றம்,
தீபஜோதி கல்விக் கழகம்.

(சி-941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பங்களாதேஷில் கலவரம்


# மகளிர் இருபது-20 உலகக்கிண்ண தொடரை இந்தியாவிற்கு மாற்ற ஆராய்வு

பங்களாதேஷ் நாட்டில் நெருக்கடியான சூழல் நிலவுவதால், அங்கு மகளிர் இருபது-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மகளிர் இருபது-20 கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 3 ஆம் திகதி பங்களாதேஷில் இந்தத் தொடரை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது அங்கு அரசுக்கு எதிராக போராட்டம் வெடித்ததால் பதற்றமான சூழல் நிலவுகிறது மேலும்,

பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் பங்களாதேஷில் அரசியல் அமைதியின்மை சூழல் நிலவுகிறது. இதன் காரணமாக மாற்று வழிகளை ஐ.சி.சி ஆராய்ந்து வருகிறது.




ஒருவேளை பங்களாதேஷில் தொடரை நடத்தும் சூழல் இல்லை என்று முடிவானால ஐ.சி.சி யின் அடுத்த தேர்வு இந்தியாவாக இருக்கும் எனதகவல்வெளியாகியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக இன்னும் ஓரிரு வாரங்களில் முடிவு வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது. (நி-6)

## யாருக்கு வெற்றி?
### இலங்கை – இந்தியா மோதல்

இந்தியா- இலங்கை இடையேயான 3 ஒருநாள் போட்டி தொடரில் முதல் ஆட்டம் "டை"யில் முடிந்தது. 2ஆவது ஆட்டத்தில் இலங்கை அணி 32 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் இந்தியா 0-1 என்ற கணக்கில் பின் தங்கியுள்ளது.

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கொழும்பில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது் ரோகித்சர்மா தலைமையிலான இந்திய அணிக்கு இந்த ஆட்டத்தில் வெற்றி பெறவேண்டிய நெருக்கடி இருக்கிறது.

இந்திய அணியின் பேட்டிங்கும், பந்து வீச்சும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அதனால் அதில் இருந்து மீள்வது அவசியமாகும்


அசலன்கா தலைமையிலான இலங்கை அணி இந்த ஆட்டத் திலும் வெற்றி பெற்று தொடரை 2-0 என்ற கணக்கில் வெல்லும் ஆர்வத்துடன் இருக்கிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரை சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி 3-0 என்ற கணக்கில் கைப்பற்றி ஒயிட்வாஷ் செய்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3189

**அபிநயா**

உடனே தூக்கம் வந்திடுது மாமா
படுத்தவுடனயோ மாப்பிள்ளை?
ஓபிஸுக்கு போனவுடனே மாமா



**விதுஷா**


நாம நல்லா இருக்கனும் என்று
நினைக்கிறவங்களை விட



இவன் மட்டும் எப்படிடா நல்லா இருக்கான்
என்று நினைக்கிறவங்கள் தான் அதிகம்

**மதுமிதா**

கம்பெனியில் கஷ்டப்பட்டு வேலை
பார்க்கும் போது மெதுவாக
சுத்தும் கடிகாரம்



லீவு பொட்டு ரெஸ்ட் எடுக்கும் போது
வேகமாக சென்று விடும்

**சுபாஷ்**

எவ்வளவு பணம் இருந்தாலும் நிம்மதி
இல்லை...
ஏன்டா?



கடன்கொடுத்தவன் எல்லாம் திருப்பிக்
கேட்கிறாங்கள்

**தமிழினி**

அமைதியான கடல்
ஆழம் இல்லாதது போல தான் தெரியும்



அதுபோல பொறுமையான மனிதர்கள்
பலம் இல்லாவர்கள் போல தான் தெரிவார்கள்

**அக்ஷரா**

ட்ரெஸ் எடுத்துட்டு விலையை
பார்க்கிறவன் பணக்காரன்



விலையை பார்த்துட்டு ட்ரெஸ்
எடுக்கிறவன் ஏழை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் முற்போக்கு கூட்டணி
# சஜித்திற்கு ஆதரவு

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாசவிற்கு ஆதரவு வழங்க மனோ கணேசன் தலைமை யிலான தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இந்த அறிவிப்பை மனோ கணே சன் வெளியிடப்பட்டுள்ளார்.


"ஐக்கிய மக்கள் சக்தியு டன் எமது கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திடும். நாங்கள் சூரியனை யும் சந்திரனையும் கேட்க வில்லை.

பெருந்தோட்ட சமூகம் மற் றும் பிற இடங்களில் வாழும் தமிழர்கள் அனைவரும் இலங்கையர்களாக கருதப்பட வேண்டும் என்று தான் நாங்கள் விரும்புகிறோம்" என மனோ கணேசன் தெரி வித்தார். (ரி-6)



# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி
### ( ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர்- பரந்தன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் )



தோற்றம்
23.03.1937

மறைவு
04.08.2024

தாமோதரம்பிள்ளை வீதி, சப்பச்சிமாவடியைப் பிறப்பி டமாகவும் மீசாலை கிழக்கு மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 04.08.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- இலட்சுமி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- கனகம்மா தம்பதியினரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் விநாயகமூர்த்தி, யோகம்மா, மார்க்கண்டு, காலஞ்சென்றவரான சின்னத்தங்கம் மற்றும் கணேசு, சரோஜினிதேவி, இரத்தினம், புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவீந்திரன் (ஜேர்மனி), வாசுகி(ஜேர்மனி), வானதி, ரமேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி, சிவபாலன், சிவநேசன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷா, லக்ஸன், ஆருஷா, இனுஷ், பிரவின், பிரன்யா, அனுதரன், துவாரகா, இந்திகா, விதுஷன், விபுலன், துவாரகன், விதுன், நதுஷா, நதுன், ஆகியோரின் அன்புப் பேரனும், அதிரா, அகிஸ் ஆகியோரின் அன்பு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.08.2024 இன்று புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 776 7917

# இராசிபலன்

07.08. 2024
ஆடி 22, புதன்கிழமை
திருதியை முன்னிரவு 9.39 மணிவரை

பூரம் முன்னிரவு 8.54 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை

ஆடிப்பூரம்
சந்திராஷ்டமம் - பூராடம், உத்தராடம்

வளவன்




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற் றம் காணும் நாள், வழிபாடு ஆனந் தம் தரும்.




குடும்பத்தில் கலகலப் பான சூழ்நிலை உரு வாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




ஆடம்பரப் பொருட் களை வாங்கும் எண் ணம் உருவாகும், இயல் பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.




உடல்ரீதியான உபாதை கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட் டால் இன்பம் காண வேண் டிய நாள், எந்தக் காரியத்தையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய் திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.




அடுத்தவர் விவகாரங்க ளில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனக் குழப்பம் அகல மாற்றி னத்தவர்கள் உறுதுணை புரிவர், கற்பனை மிகுதியான நாள்.




செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.




குடும்ப மகிழ்ச்சி அதிக ரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.




எதிர்ப்பாக இருந்தவர் கள் மனம் மாறுவர், செய்தொழில் மேன்மை யுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




தொழில் ரீதியான அலைச் சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை தேவை, குடும்பத்தினை அனுசரித்துச் செல்வது நல்லது, வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கி யத்தில் தெளிவு பிறக்கும், தொழி லில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




நினைத்த காரியத்தை நினைத்த நேரத்திலேயே செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்பு கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்க ளின் திறமைகள் வெளிப்படும் நாள்.

இஷ்டபூர்வமாகவும் மகிழ்ச்சியுடனும் செய்யும் வேலை ஒரு நாளும் கஷ்டமாக இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை உயிரிழப்பு; தாய் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டிப் பகுதியில் ஒன்றரை மாத குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தாயை 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தாய்ப்பால் அருந்திய பின்னர் குழந்தை அசைவின்றி காணப்பட்டதாக அளவெட்டி வைத்தியசாலையில் குழந்தையை அனுமதித்த நிலையில் அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.

இந்நிலையில் குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது குழந்தையின் மரணம் இயற்கை மரணம் அல்ல என அறிக்கையிடப்பட்டது.

அதனை அடுத்து குழந்தையின் தாயாரை கைது செய்த பொலிஸார் தாயாரிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்

அதன்போது குழந்தை பால் குடிக்க மறுத்தமையால் கைகள் கால்களை திருகியதாகவும் தொடர்ந்து அழுது கொண்டிருந்ததால் தலையை சுவரில் மோதியதாகவும் குழந்தையின் கால்களை தான் ஏறி மிதித்தாகவும் காதுக்குள் பிரம்பை விட்டு குத்தியதாகவும் விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின்பின்னர் தாயாரை பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தியவேளை தாயை 7 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று தாயை மனநல மருத்துவரிடம் முற்படுத்தி மருத்துவ அறிக்கையை பெற்று மன்றில் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டுள்ளது. (நி-6-33)

# ஆடிப்பூர உற்சவம்

(கரணவாய்)

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான ஆடிப்பூர உற்சவம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி 9 மணியளவில் 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (நி-6)

# முகாமையாளரை தாக்கி மோ.சைக்கிள் பறிமுதல்

## சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்களப்பு-அறுகுவெளிப் பகுதியில் ஏ-32 வீதியில் நேற்று முன்தினம் இரவு வங்கி முகாமையாளர் ஒருவருடைய மோட்டார் சைக்கிளை குழுவொன்று பறித்துச் சென்றிருப்பதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முழங்காவில் பகுதியில் உள்ள அரச வங்கியொன்றில் முகாமையாளராக பணியாற்றும் ஒருவருடைய பல்சர் ரக மோட்டார் சைக்கிளே இரவு 9 மணியளவில் அறுகுவெளிப் பகுதியில் வைத்து அடித்துப் பறிக்கப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த வங்கி முகாமையாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் இது தொடர்பில் பொலிஸாரிடமும் முறையிட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

# பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய குழுவினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை நேற்று முன்தினம் இரவு குழுவொன்று வைத்தியசாலை வளாகத்தில் வைத்துத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்த நபருடன் வந்த நால்வரே இவ்வாறு பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது மூவர் தப்பித்துள்ள நிலையில் ஒருவரை ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த 22 வயதான பாதுகாப்பு உத்தியோகத்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (நி-6-30)



யாழ் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 200-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 350-400 | 500 |
| தக்காளி | 300 | 300 | 260 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 120-150 | 200 |
| கோவா | 350 | 400 | 360 | 280 | 450 |
| கரட் | 350 | 380 | 480 | 300 | 500 |
| பூசணி | 180 | 180 | 180 | 150 | 150 |
| புடோல் | 160 | 150 | 150 | 140 | 250 |
| வாழைக்காய் | 250 | 200 | 250 | 200-250 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 400 | 350 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 250 | 220 | 200 |
| பாகற்காய் | 500 | 600 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 160 | 150 | 160 | 150-200 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 140 | 240 |
| பயற்றங்காய் | 350 | 500 | 450 | 350-450 | 450 |
| லீக்ஸ் | 520 | 450 | 450 | 300 | 500 |
| பீற்றூட் | 350 | 300 | 400 | 350 | 300 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 1200 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 200 | 50-80 | 120 |
| போஞ்சி | 600 | 600 | 1200 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 700 | 800 | 450-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 70 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 650 | 150 | 700 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 400 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 160 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 80 |


# ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் தீர்த்தோற்சவம் இன்று 07.08.2024

"கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்குவம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே"
அபிராமி அந்தாதி - 22

நாம் நல்வாழ்வு தரும் **வாலாம்பிகை தாயே!** தன் அடியாருக்கு ஏற்படும் சிறிய இன்னல்களையும் **தாங்காது வாடிவிடுவாள்.** அம்பிகையின் **கருணை** அத்தகையது! கொடி ஒரு கொம்பைச் சுற்றி படருவது போல்,**அவள் ஈசனைச் சுற்றி** படருகிறாள் அம்பிகை இறைவனைப் பற்றி படர்ந்து இருவரும் இணைந்தே இருத்தலால் **இவ்வுலகும் இயங்குகிறது எனத் திருமூலர்-1142**

**"பைங்கொடி யாளும் பரம னிருந்திடம்
திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாக விளங்கி வருதலால்
பெண்கொடி யாக நடந்தது உலகே"**

பசுங்கொடி போன்ற பராசக்தியும் பரம்பொருளுடன் கூடி இருந்திட, அது **சிவசக்தி சொரூபம்** வல்லமை தரும் **சித்த சக்தியாக சோதிப்பிழம்பாகத்** திகழும். பூமண்டலம் முழுதும் **அருளால் பொலிவு பெறுவதாகும் வாலாம்பிகைத் தாயே!** திருமூலர் இன்னும் ஓர் மந்திரத்தில் 1058 "கொம்பனையாளைக் குவிமுலை மங்கையை" கேட்பதெல்லாம் கொடுக்கின்ற **கற்பகக் கொம்பே!**

நம் பிறப்புக்குக் காரணமான ஆசாபாசங்கள் அனைத்தும் நீங்கி, முத்தி எய்தல் வேண்டும். வாழ்வில் அல்லலால் துவளும் பொழுது துணிவும், துணையும் எய்தல் வேண்டும், அதற்குரிய நீ வந்து ஆண்டு கொண்டு **தந்தருள்வாய் தாயே!**

**வாலாம்பிகைத் தாயே! நின்பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி தந்தருள்வாயே! பிறவா வரம் வேண்டும் வரம் தருவாயே! தாயே!**



**க.கு.க சிவபாலன் K.K.K**
**போசகர், மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-940)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைவேலிகளை அமைக்க நடவடிக்கை எடுங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காயில் யானைகளின் நெருக்கடி காணப்படுகின்ற கிராமங்களில் யானை வேலிகளை கூடுதலாக அமைக்குமாறு பொது மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தேராங்கண்டல் ஆகிய கிராமங்களில் மாலை வேளைகளில் காட்டில் இருந்து யானைகள் முதன்மை வீதிகளுக்கு வருகை தருவதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் யானைகளினால் அச்சங்கொண்டுள்ளனர்.

வயல் நிலங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக பயிர்ச் செய்கைக்காக யானைகளுக்கான வேலிகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் யானைகள் காடுகளில் இருந்து குடிமனைகளுக்குள்ளும் முதன்மை வீதிகளிலும் கூடுதலான நடமாட்டம் காணப்படுவதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

யானைகளின் வருகையினை தடுக்க வீதிகளின் இரு மருங்கிலும் யானை வேலிகள் அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6-350)

லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (227)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719

WESTERN UNION WU · MoneyGram · Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# INVITATION FOR BIDS (IFB)
# TEACHING HOSPITAL, JAFFNA

| S.No | Item Code | Non-Refundable tender fee (Rs.) | Supply, Installation, Maintenance & Commissioning of | Bid Security |
|---|---|---|---|---|
| 1. | JTH/SA/P09/ GAR.BAG /2024 | 1000.00 | Supply of Garbage Bags & Shoes | 100,000.00 |
| 2. | JTH/SA/P10/STATIONARY/2024 | 1000.00 | Supply of Stationary Items | 100,000.00 |
| 3. | JTH/SA/P11/ WATER SUPPLY/2024 | 1000.00 | Supply of Water Supply Items | 50,000.00 |
| 4. | JTH/SA/P12/ TONER/2024 | 1000.00 | Supply of Toners | 50,000.00 |
| 5. | JTH/SA/P13/ELECTRICAL/2024 | 1000.00 | Supply of Electrical Items | 100,000.00 |
| 6. | JTH/SA/P14/TYRE&TUBE/2024 | 1000.00 | Supply of Tyre & Tube Items | 50,000.00 |

1. Sealed bids for the supply of the under mentioned Category will be received by Chairman, Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.

2. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) method

3. Only the sole nominated representative / accredited agent of manufactures Offered for the Sri Lanka market are eligible to participate in this bid.

4. Sealed bids should be made on a complete set of bidding documents for the project in original shall be sent by the Registered Post or shall be deposited in the tender box. addressed to the Chairman, Regional Procurment Committee, and Teaching Hospital Jaffna on or before 10.00 am on 21st of August, 2024.

5. Bid documents should be obtained from Accountant, at the above address from 07.08.2024 to 20.08.2024
   a) A written application to the Chairman, Regional Procurement Committee, Teaching Hospital Jatfna.
   b) Certificate of Business Registration (Certified Photocopy)
   c) Upon payment of the non-refundable tender fee stated above in cash to the Director teaching Hospital, Jaffna.

6. All bids must be accompanied by a Bid-Security amounting to LKR mentioned in the bid projects table/ document for each projects by cash or bank bond and the validity period until 17.12.2024 (119 days)from, deadline of the bid.

7. Bids will be opened immediately after the closing of bids at the office of the Chairman/ Director, bidders or their representatives permitted to be present when bids are opened.

8. Bid Docurnents may be inspected free of charge at the Procurement Division in Our hospital.

9. Further information could be obtained from Directot/Accountant TH/Jaffna (Tel -021 222 3149/ 021 221 2482)

(C-942)

**Director / Chairman.**
**RPC/Teaching Hospital, Jaffna.**
**05.08.2024**

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : **மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
விண்ணப்பதாரரின் பெயர் : **தயானந்தன் ஜெயப்பிரியா**
முகவரி : ஆதன இல 02 வீதி : **மல்லாகம் 2ம் ஒழுங்கை**, வட்டாரம் : 13

வட்டாரம் 13 **மல்லாகம் 2 ஆம் ஒழுங்கை** வீதி, ஆதன இலக்கம் 02 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் **மேற்கு மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய்** இறை "கோட்டைத்தறை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு **5 குழி 15.70** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் ஐ சேர்ந்த **தயானந்தன் பெண் ஜெயப்பிரியா** ஆகியவர்களால் "இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே" என பிரசித்த நொத்தாரிசு **கிருஸ்ணவேணி சந்திரலிங்கம்** அவர்களால் எழுதப்பட்ட 1268 ஆம் இலக்க 2013.09.08 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **எ.கமலசேகரம்** அவர்களால் வரையப்பட்ட **6078** ஆம் இலக்க **2013.08.07** ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் **05** நிலப்பரப்பு **15.70** குளி. கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - **வீதி**
கிழக்கு - **இலங்கைநாதன் பெண் இராசமலர்**
தெற்கு -**தயானந்தன் ஜெயப்பிரியா மற்றும் தேவெந்திரன் பெண் வசந்தாதேவி**
மேற்கு -**தயானந்தன் ஜெயப்பிரியா**

மேற்குறித்த ஆதனத்தை **தயானந்தன் பெண் ஜெயப்பரியா** என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(1626)

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி.பா:04
உயரம் :5'4"
தகைமை/தொழில்:Diploma in construction Technology, Drau ghtsman
எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/14106

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி.பா:15
உயரம் :5'7"
தகைமை/தொழில்:Higher Nationa Diploma in Business Adminis tration
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14454

பிறப்பு:-1993-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா:59
உயரம் :5'8"
தகைமை/ தொழில்:Bcom,Banker
எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள,அரச தொழில் புரியும் பெண்
தொ.இ: B/14455

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:16 3/4
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: B.Com ,Banker
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: G/10870

பிறப்பு -1996-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா:23 1/4
உயரம் : 5'9"
தகைமை/தொழில்:Bsc Chemistry (SP)
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: G/14490

பிறப்பு -1994- இந்து
நட்சத்திரம்:பூசம்
கி.பா:26
உயரம் :5'6"
தகைமை/தொழில்:Bsc (MIT), Senior, Software Engineer
எதிர்பார்ப்பு:Degree Holder
தொ.இ: G/14487

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இன்று ஒரு தகவல் 205



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### யானையும் பானையும்

ஒரு அமைச்சர் அரண்மனைக்கு தாமதமாக வந்திருக்கின்றார். ஏன் தாமதம் என்று கேட்டார் ராஜா. அரசே நான் விரைவாகவே புறப்பட்டேன் அந்த சமயம் பார்த்து என் பையன் அடம்பிடிக்க ஆரம்பித்து விட்டான். நானும் கூட வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கின்றான். அவனை ஒரு வழியாக சமாதானம் செய்து சரி செய்த விட்டு வருவதற்குள்ளே போதும் போதும் என்று ஆகி விட்டது. இது தான் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது என்றார் அமைச்சர்.

அரசர் சிரித்தார். என்ன அமைச்சரே அரண்மனையிலே எத்தனையோ கடுமையான பிரச்சினைகளுக்கு எல்லாம் மிகவும் சாமர்த்தியமாக பதில் சொல்லி சமாளிக்கின்ற உங்களுக்காக ஒரு குழந்தையை சமாதானப்படுத்துவது பெரிய விடயமாக போய் விட்டது என்றார். மன்னா ஒரு பெரிய யானையை அடக்குவதை விட, ஒரு பெரிய சேனையை போரிலே ஜெயிப்பதை விட, ஒரு குழந் தையை சமாதானப்படுத்துவது கஷ்டமான செயல் என்றார் இவர்.

அப்படியா சொல்கின்றீர்கள் என்று சந்தேகமாகக் கேட்டார் ராஜா. வேண்டுமென்றால் நான் அதை நிரூபித்து காட்டுகின்றேன் அதற்கு நீங்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். கொஞ்ச நேரம் நீங்கள் எனக்கு அப்பாவாக நடிக்க வேண்டும். நான் உங்கள் குழந்தையாக நடிக்கின்றேன். நான் அடம்பிடிப்பேன் நீங்கள் என்னை சமாதானப்படுத்த வேண்டும் என்றார் அமைச்சர்.

சரி என்று ஒத்துக் கொண்டார் ராஜா. இப்போது ராஜா தான் அப்பா அமைச்சர் தான் குழந்தை. அமைச்சர் தரையிலே உட்கார்ந்தார். கையை காலை உதைத்துக் கொண்டு கத்த ஆரம் பித்தார். அதாவது குழந்தை அடம் செய்ய ஆரம்பித்து விட்டது. அப்பா அதாவது ராஜா அருகிலே வந்தார். ஏன் அழுகின்றாய்? உனக்கு என்ன வேண்டும்? என்றார். எனக்கு ஒரு யானை வேண் டும் என்று அழுதது அந்தக் குழந்தை. இது தானா பிரமாதம் என்று ஒரு பொம்மை யானையை கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார் கொடுத்தார்கள். மறுபடியும் குழுந்தை கத்தியது.

எனக்கு இது வேண்டாம் நிஜ யானை வேண்டும் என்றது. ராஜா நினைத்தால் முடியாதா. உடனே ஒரு பெரிய யானையைக் கொண்டு வந்து நிறுத்தினார். அப்பா எனக்கு இப்போது ஒரு பானை வேண்டும் என்றது குழந்தை. ராஜா பார்த்தார். ஒரு பானையை கொண்டு வரச் சொன்னார். கொடுத்தார்.மறுபடியும் உதைக்க ஆரம் பித்தது. நீ கேட்டதை கொடுத்து விட்டேன் மறுபடியும் ஏன் கத்து கிறாய் என்றார். இந்த பானைக்குள்ளே அந்த யானை போக வேண்டும் என்று கத்தியது குழந்தை.

ராஜா பார்த்தார் சரி இந்த பானையிலே அந்த யானை போக வேண்டும் அவ்வளவும் தானே என்றார். அந்த பானையை தரை யில் வைத்தார் அதிலே அந்த யானையை போகச் சொன்னார். யானை அதிலே காலை வைத்தது. பானை உடைந்து போனது குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பித்தது. எனக்கு பானை வேண்டும் என்று சரி இன்னொரு பானை கொண்டு வந்து கொடுங் கள் என்றார். கொண்டு வந்து கொடுத்தார்கள். எனக்கு இந்தப் பானை வேண்டாம். அந்த பானை தான் வேண்டும் என்று கத்தியது குழந்தை.

அது உடைந்து போய்விட்டதே என்றார். உடைந்தால் என்ன அதை மறுபடியும் ஒன்று சேர்த்து பழையபடி பானையாக்கி கொடு என்று பிடிவாதம் செய்தது குழந்தை. ராஜா பார்த்தார் இதற்கு மேலே நம்மால் தாக்குப்பிடிக்க முடியாது என்று முடிவிற்கு வந்து விட்டார். போதும் அமைச்சரே புரிந்து கொண்டேன் குழந்தையை சமாதானப்படுத்துவது கஷ்டம் தான் என்று புரிந்து கொண்டேன் எழுந்திடுங்கள் என்றார். அசைச்சர் அதற்கு பின் தான் கையை காலை உதறிக் கொண்டு எழும்பினார்.

குழ்தைகள் பிடிவாதம் இருக்கு பாருங்கள் அது ஒரு தனி ரகம். பாடசாலையிலே ஒரு பையன் தரையிலே கிடந்து வாள் வாள் என்று கத்திக் கொண்டு இருந்தான். அந்த நேரம் பார்த்து பையனுடைய அப்பா வந்தார். அழைத்துக் கொண்டு போவதற்கு.

ஏன் பையன் கத்துகிறான் என்று கேட்டார். அவர்களுக்கிடையே ஏதோ சண்டை. இதிலே ஒருபக்கத்துக் காதை கடித்து விட்டான். அது தான் கத்துகிறான் என்றார் ஆசிரியர். ஐயையோ அப்படி என்றால் என் பையனை உடனே வைத்தியசாலைக்கு கூட்டிக் கொண்டு போக வேண்டுமே என்று பதறினார் அந்த அப்பா.

பதறாதீர்கள் சார். கடிபட்டவன் வைத்தியசாலைக்கு போய் விட்டான். இவன் கடித்தவன் கத்துகிறான் என்றார் ஆசிரியர். ஏன் என்று கேட்டார் அப்பா.ஆசிரியர் தன்னுடைய காதைத் தடவிப் பார்த்து விட்டு. இன்னொரு பக்கத்துக் காதும் கடிப்பதற்கு வேண்டும் என்று கத்துகின்றான் சார் என்றார்.

## இந்திய ஜனாதிபதி முர்முவுக்கு பிஜி நாட்டு உயரிய விருது



(டில்லி)

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு மூன்று நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை நேற்று முன் தினம் ஆரம்பித்தார்.

அதன்படி, நேற்று தெற்கு பசுபிக் தீவு நாடான பிஜி நாட்டுக்கு திரவுபதி முர்மு சென்றடைந்தார். விமான நிலையத்தில் திரவுபதி முர்முவை பிஜி பிரதமரை சம்பிரதாயபூர்வமாக வரவேற்றார்.

இந்த பயணத்தின் முக்கியத்துவமான பிஜி நாட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

இதனிடையே, பிஜியின் ஜனாதிபதி கட்டோனிவேர் மற்றும் துணை ஜனாதிபதி ஆகியோர் திரவுபதி முர்வுமுக்கு அந் நாட்டின் உயரிய விருதை வழங்கினார்.

பிஜிக்கு சென்றுள்ள முதல் இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு தான் என்பது சிறப்பம்சமாகும். பிஜி பயணத்தைத் தொடர்ந்து நியூசிலாந்து செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கலைக்கப்பட்டது பங்களாதேஷ் பாராளுமன்றம்!



(டாக்கா)

பங்களாதேஷ் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றை கலைப்பது மாணவர் போராட்ட ஒருங்கிணைப்பாளர்களால் முக்கிய கோரிக்கையாக இருந்தது. உள்ளூர் நேரப்படி 15:00 (09:00 GMT) வரை அவர்கள் காலக்கெடுவை நிர்ணயித்தனர்.

இராணுவம் தலைமையிலான அரசை ஏற்க மாட்டோம் என்று மாணவர் போராட்டக்காரர்கள் கூறியுள்ளனர்,

மேலும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ்(வயது84) இடைக் கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகராக இருக்க ஒப்புக் கொண்டுள்ளார்.


இதேவேளை பங்களாதேஷின் இடைக் கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகராக இருக்க வேண்டும் என்ற போராட்டகாரர்களின் கோரிக்கைக்கு முஹமது யூனுஸ் ஒப்புக் கொண்டதாக அவரது செய்தித் தொடர்பாளரை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் ஆட்சி கவிழ்ப்பு சீனா, பாகிஸ்தான் கூட்டுச் சதி!

## கசிந்தது தகவல்



(டாக்கா)

**பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறை, ஷேக் ஹசீனாவின் ஆட்சியை கவிழ்த்தது ள்ளிட்டவற்றின் பின்னணியில் சீனா, கிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. ருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.**

இது தொடர்பாக இந்திய உளவுத்துறைக்கு கிடைத்துள்ள தகவலில், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ மற்றும் சீனாவின் பாதுகாப்புத் துறை ஆகியவை பங்களாதேஷில் மாணவர் அமைப்புகளை தூண்டிவிட்டு ஷேக் ஹசீனாவின் ஆட்சியை கவிழ்த்துள்ளது என்றும் இந்தியாவுக்கு ஆதரவாக உள்ள ஷேக் ஹசீனாவுக்கு பதில் பாகிஸ்தான் நாட்டுக்கு ஆதரவு நிலைப்பாட்டில் இருக்கும் பங்களாதேஷத்தின் தேசியவாதக் கட்சியை (பி.என்.பி) ஆட்சிக்கு கொண்டுவர முயற்சிக்கின்றன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பி.என்.பி.கட்சியின் ஆட்சியை கொண்டு வருவதன் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடி அளிக்க பாகிஸ்தான் முயற்சிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. (நி-6)

## ாக்கா சர்வதேச விமான நிலையம் ற்காலிகமாக இடைநிறுத்தம்




(டாக்கா)

ங்களாதேஷில் உள்ள க்கா சர்வதேச விமான லையம் தற்காலிகமாக ப்பட்டுள்ளது.


விமான நிலையம் பல ணிநேரம் மூடப்பட்டுள் ாக பங்களாதேஷ் இரா வம் தெரிவித்துள்ளது.

விமான நிலையம் மூடப் டுள்ளதால், பங்களாதேஷிற்கு வருகை தரும் சில விமானங்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் டாக்கா நகரில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

## பங்களாதேஷ் கலவரத்தால் 518 கைதிகள் தப்பியோட்டம்

### பயங்கர ஆயுதங்களை வைத்திருப்பதாக பகீர் தகவல்



(டாக்கா)'

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு கலவரமும் ஆட்சி மாற்றமும் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கலவரம் காரணமாக பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்த நிலையில் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கும் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவை உடனடியாக விடுதலை செய்ய அந்நாட்டு ஜனாதிபதி முகமது ஷஹாபுதீன் உத்தரவிட்டு இருந்தார். எனினும், இதற்கான நடவடிக்கைகள் எப்போது தொடங்கும் என்பது கேள்விக்குறியாக இருந்தது.

இதனிடையே கலவரம் காரணமாக ஷெர்பூர் சிறையில் உள்ள பாரிய சிறையில் மோதல் ஏற்பட்டது. நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் 518 கைதிகள் தப்பியுள்ளனர். தப்பியோடிய கைதிகள் பயங்கர ஆயுதங்களை வைத்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சிறைச்சாலை இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் இருந்து சுமார் 100 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இதன் காரணமாக இந்திய எல்லைப் பகுதியில் அதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எல்லைப் பாதுகாப்புப் படையானது (பிஎஸ்எஃப்) எல்லையில் மோதல் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் அதன் பாதுகாப்புப் பணியை அதிகரித்துள்ளது. தப்பியோடியவர்களில் 20 பேர் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் என அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி நிலையம் மன்னாகண்டலில் முற்றுகை

✦இருவர் கைது

✦475 லீற்றர் கோடா, 3 பரல்கள் மீட்பு



(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தினை நேற்று முன்தினம் முற்றுகையிட்ட ஒட்டுசுட்டான் பொலிஸார் இருவரைக் கைது செய்ததுடன் கசிப்பு உற்பத்தி செய்யும் கோடாவுடன் மூன்று பரல்களையும் மீட்டுள்ளனர்

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில், ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் அறுமனாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக ஒட்டுசுட்டான் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 475 லீற்றர் கோடாவுடன் மூன்று பரல்கள்களையும் புதுக்குடியிருப்பு சிவநகர், மந்துவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37, 55 வயதுடைய இருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-6-299

# வட- கிழக்கு தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு

## வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

**(யாழ்ப்பாணம்)**

**பன்னாட்டுச் சமூகத்தின் நீதிக்கான தலையிடு தலை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.**

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் போராட்டத்திக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது வெளியிட்ட அறிக்கையில் ஈழமக்கள் தமது உரிமைகளைக் கோரி போராடத் தொடங்கிய காலத்தில் இருந்தே வலிந்து காணமல் ஆக்கப்படுதல் என்பது இன ஒடுக்குமுறையின் ஒரு ஆயுதமாக கையாளப்பட்டு வந்துள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் போதும் இறுதியாக முள்ளிவாய்க்காலிலும் அதன் பின்பும் காணமல் ஆக்கப்பட்வர்களுக்கு என்ன நடந்தது என்பதையே இன்று ஈழத்தமிழ் மக்கள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இன வழிப் புக்கு சர்வதேச விசா ரணை வழியாகவே நீதி வழுங்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம். 2700 நாட்களை கடந்தும் கடந்த 15 ஆண்டுகளா கவும் தெருவில் நின்று எம் பிள்ளைகளின் விடுதலைக்கும் நீதிக்குமாக தொடரும் போராட்டத்தை ஸ்ரீலங்கா அரசினால் ஒரு போதும் அடக்கி ஒடுக்க முடியாது. பன்னாட்டு நீதி கிடைக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என்பதையும் நாம் மீண்டும் ஸ்ரீலங்கா அரசுக்கு நினைவு படுத்துகின்றோம்.

ஒகஸ்ட் 30 ஆம் நாள் பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும் அன்றைய நாளில் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்கும் விடுதலைக்கும் முன்னெடுக்கவுள்ள போர்ராட்டததிற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு அழிக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-33)

# கற்பகதருவின் பெருமையும் வல்லமையும் எதிர்பார்ப்பும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வடகிழக்கின் தாவர சங்கமத்துள் அதிகமாக காணப்படும் கற்பக தருவெனும் பனை வளத்தின் பெருமைகள், பயன்பாடுகள் பலபல. எமது வாழ்வாதாரத்தின் அடிப்படையான தாவரமாக இருப்பதனாலும் ஒரு வித்திலையின் முன்னுதாரணமும் உயர்ந்தெழுந்த கறுத்த மேனியும் பச்சைவட்டும் கருக்குடன் சுருக்கெனத் தைக்கும் இலைகளும் அதனது பயன்பாட்டை ஒரு காலத்தில் முழுவதுமாக எமது சமூகம் பெற்றுணர்ந்த நிலையில் என்றுமே வடகிழக்கில் மட்டுமல்ல புலம் பெயர்ந்திருந்தாலும் தாயகத்தின் அருமை, பெருமைகளுடன் இணைந்திருக்கும் எம்மவர்களுக்கும் எத்தாவரமும் பனை சார் சூழல் தொகுதியின் ஓரங்கமே. கற்பக தருவினால் எமக்கு கிடைக்கும் வசதிகள், வாய்ப்புக்கள் ஏராளம். ஆனால் பனைசார் தொழில்நுட்பத்திற்கான அங்கீகாரம் முழுமையாக கிடைத்து விட்டால் இதனை அடிப் படையாகக் கொண்டு வாழும் மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்தெழுந்துவிடும்.

பனை, தென்னை இவற்றுடன் கமுகு (பாக்கு) என்பன ஒரு குடும்பத்து விருட்சங்கள். தென்னையிலிருந்து பெறப்படும் வருமானம் போல பனையிலிருந்தும் கமுகுவிலிருந்தும் பெறப்படுவதில்லை. ஆனால் தற்போது இருக்கின்ற தொழில்நுட்பங்கள் பனையிலிருந்தும் கமுகுவிலிருந்தும் அதீத ஆதாயத்தை பெற வாய்ப்புக்களை உருவாக்கியிருக்கின்றன. எமது மனைப் பொருளாதாரத்தில் தென்னை ஒரு முக்கிய பல்லாண்டு தாவரமாகி அனைத்து வீடுகளிலும் மனைக்கு நான்கு தென்னையாவது வளர்க்கப்பட்டிருக்கின்றது. தென்னையிலிருந்து தேங்காய்கள் அறுவடை செய்யப்பட்டு தினதேவைக்காக பயன்படுத்தப்படுகின்றன. ஓலையும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் வரண்ட பிரதேசமான இங்கே மனைகளைக் குளிர்வாக வைத்திருக்கும் பனையோலை மற்றும் பனம் பொருட்கள் எதனையும் நம்மவர்கள் முழுவதுமாக பயன்படுத்துவதில்லை. இது பனை வளத்தின் பயன்பாட்டினை மக்கள் மயப்படுத்துவதில் ஏற்பட்ட பின்னடைவு என்று கூறலாம். பனைமரத்து பயன்பாடுகள் முன்னிலைப்படுத்தப்படாமைக்கு எமது செய்கைகளும் நினைப்பும் முக்கிய காரணங்கள். அது சார்ந்த கண்டுபிடிப்புக்களும் நடைபெறவில்லை. இந்த இடைவெளியை நிரப்புவதற்கான குறுகியகால மற்றும் நீண்டகால திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும்.



தென்னையைப் போல பனைமரத்திற்கு அதனை வளர்ப்பதில் நமது மனைகளில் முன்னுரிமையில்லை, மாறாக அதனைப் பயன்படுத்தவும் மக்கள் முனைப்புக் காட்டவில்லை. ஒரு குடும்ப உறுப்பினர்களிடையே ஏனிந்த பாகுபாடு? அரிக்கேசியே (Arecaceae)குடும்பத்தின் உறுப்பினர்களான பனை, தென்னை மற்றும் கமுகு இவை மூன்றினதும் பயன்பாடுகளை உச்ச நிலையில் பெறுவதற்கான வழிவகைகளை உருவாக்கிக் கொண்டால் எமது மக்களின் பனைசார் பொருளாதாரமும் அதனையொட்டிய வாழ்வாதாரமும் சிறந்து விளங்கும். மாறாக தரிசு நிலங்களிலும் பயன்பாடதிகமற்ற நிலத்திலும் பனைமரத்தை வளர்ப்பதனை காணலாம். தானாக விழுந்த பனம்பழம் அதிலிருந்து வந்த விதைகள் மண்ணுள் புதையுண்டு வடலிகளாக வளர்ந்திருப்பதை நேராக்கி குறிப்பிட்ட இடங்களில் சரியான இடைவெளி விட்டு விதையிட்டால் அவை வளர்ந்து மாறுகின்ற சூழலுக்கு தாக்குப்பிடித்து வளர்வதை உறுதிசெய்யலாம். பனைமரத்திற்கான அங்கீகாரம் முழுமையாக வழங்கப்படும் போது தான் அதனை மக்கள் முனைப்புடன் வளர்த்து அதிலிருந்து எமது வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

பனைசார் வாழ்வியலிலிருந்து எம்மை என்றுமே பிரித்துவிட முடியாது. பாரம்பரியமாக வாழ்ந்த வாழ்க்கைக்குள் பலர் இப்போது மீண்டு வருவதற்கான முயற்சிகளை காண முடிகின்றது. அபரிவிதமான விஞ்ஞான தொழினுட்பவளர்ச்சிக்குள் சிறைப்பட்டு அதில் மகிழ்ச்சியைத் தொலைத்துவிட்டு தற்போது கிராமத்தை நோக்கிய அவர்களது பயணத்தை அறிய முடிகின்றது. இன்றைய தினம் உலக மகிழ்ச்சியை மகிழ்வாக பனை சார் வாழ்வியலில் பனையிலிருந்து பெறப்படும் அனைத்தையுமே பயன்படுத்தி அவற்றை மதிப்பேற்றிய பொருட்களாக உலகசந்தைக்கு கொண்டு செல்வதற்கான வழிமுறைகளை கையாளல் அவசியம். பனை என்பது விருட்சம் அதில் கழிவுகள் என எதுவுமே இல்லை. கற்பகதரு என்பதற்கான அர்த்தமும் அதுவே. தனது அனைத்து பொருட்களையுமே பயனுள்ளதாக பனைசார் வாழ்வியலுக்குள் கிடைக்கக் கூடியதாக இயற்கையாகவே கொடுக்கப்பட்ட கொடையை நாம் பயன்பாடில்லாமல் ஆக்கிவிட்டிருக்கின்றோம்

பனையிலிருந்தான அந்நிய செலாவாணி மட்டுப் படுத்தப்பட்டதாகவே இன்னமும் இருப்பதனைக் காணலாம். இதனால் பனைசார் பொருளாதாரம் வளர்ச்சியடைவதில் பின்னடைவு காணப்படுகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் மாத இராசி பலன்கள்-2024

## அனைவருக்கும் ஏணியாக இருந்து ஏற்றி விடும் திறன் கொண்ட கும்ப ராசியினரே!




கிரகநிலை - ராசியில் சனி (வ) - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு - சுகஸ்தானத்தில் செவ்வாய், குரு - பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

கிரகமாற்றங்கள்: 01-08-2024 அன்று சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 16-08-2024 அன்று சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 26-08-2024 அன்று சுக்கிரன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 26-08-2024 அன்று செவ்வாய் சுகஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 31-08-2024 அன்று புதன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** அனைவருக்கும் ஏணியாக இருந்து ஏற்றி விடும் திறன் கொண்ட கும்ப ராசியினரே! இந்த மாதம் எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் சில்லறை சண்டைகள் ஏற்படும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. பூர்வீக சொத்துக்களில் வரும் வருமானம் குறையலாம்.

தொழில் வியாபாரம் மந்தமாக இருந்தாலும் பணவரவு திருப்தி தரும். கடன்களை அடைப்பதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உங்களது வேலையை கண்டு மேல திகாரிகள் திருப்தியடைவார்கள். குடும்பத்தில் இருந்த இறுக்கமான நிலை மாறும்.

கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை உண்டாகலாம் கவனம் தேவை. பிள்ளைகள் விடயத்தில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. நண்பர்கள், உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நன்மை தரும்.

பெண்களுக்கு எந்தக் காரியத்திலும் சாதகமான பலன் பெற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பயணங்களின் போது கவனம் தேவை. கலைத்துறையினருக்கு இருந்த பிரச்சினை குறையும். பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும்.

அடுத்தவர்களுக்காக எந்த பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது.

அரசியல்துறையினர் வழக்கத்தை விட கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பொருள் வரவு கூடும். பயணம் செல்ல நேரலாம். வெற்றிபெற தடைகளை தாண்டி உழைக்க வேண்டி இருக்கும். பெரியோரின் ஆலோசனைப் படி செயற்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உங்களது நடவடிக்கைகள் பெற்றோருக்கு திருப்தியைத் தரும்.

**அவிட்டம் 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் சுகமும், நிம்மதியும் இருக்கும். குடும்பத்திற்கு அதிகப்படியான வருமானமும் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே சகஜ நிலை காணப்படும்.

குழந்தைகள் திறமையைக் கண்டு அவர்களை பாராட்டுவீர்கள். உறவினர் வருகை இருக்கும். யாரிடம் பேசும் போதும் நிதானமாக பேசுவது நன்மை தரும்.

**சதயம்:** இந்த மாதம் எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும். திட்டமிட்டு செயற்படுவது வெற்றிக்கு உதவும். பணவரவு அதிகரிக்கும். அதே நேரத்தில் செலவும் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

துணிச்சல் உண்டாகும். அதனால் எதைப் பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கிவிடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம்.



**பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். சக ஊழியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் முன்னோர்களுக்கு தீபம் ஏற்றி வணங்க உடல் ஆரோக்கியம் பெறும். கடன் பிரச்சினை தீரும் ;

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 8, 9, 10.

**அதிஷ்ட தினங்கள்:** 1, 2, 28, 29, 30.

## நட்பினை உயிரை விட மதிக்கும் மீன ராசியினரே!




கிரகநிலை - ராசியில் ராகு - தைரிய வீரியஸ்தானத்தில் செவ்வாய், குரு - சுகஸ்தானத்தில் சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சனி (வ) என கிரக நிலை உள்ளது.

கிரகமாற்றங்கள்: 01.08.2024 அன்று சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.08.2024 அன்று சூரியன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

26-08-2024 அன்று செவ்வாய் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31.08. 2024 அன்று புதன் பஞ்சம ஸ்தா னத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் வாக்கு வன்மையால் எல்லா நன்மைகளும் கிடைக்கப் பெறுவீர்கள். அனுகூலமான பலன்களை தரும். பண வரவு மனதிருப்தியை தரும்.

புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களது நட்பும் கிடைக்கப் பெறுவீர்கள். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வாகனங்களைப் பயன்படுத்தும் போது கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த வெற்றி கிடைக்கும். நிதி நிலைமை சீர்படும். புதிய ஓடர்கள் கிடைக்கப்பட்டு சிரமங்கள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப் பளு குறைந்து காணப்படுவார்கள்.

எதிர்பார்த்த இடத்திற்கு மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இறுக்கமான சூழ்நிலை நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.

பிள்ளைகள் மூலம் இருந்த மன வருத்தம் நீங்கி அவர்களுடன் சந்தோஷமாக வெளியே சென்று வருவீர்கள். பெண்களுக்கு எல்லா காரியங்களும் அனுகூலமாக நடக்கும்.

மனக் கவலை நீங்கி நிம்மதி உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் அலைச் சல், காரிய தாமதம் போன்றவை ஏற்படலாம். புதிய முயற்சிகளைத் தள்ளி ப் போடுவதும் நல்லது.

காரிய அனுகூலம் ஏற்படும். உணர்ச்சிவசமாகப் பேசி மற்றவர்களை கவர்வீர்கள். எல்லாவற்றிலும் எதிர் பார்த்த நன்மை உண்டாகும். பண வரவு கூடும்.

அரசியல்துறையினருக்கு கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும்.

வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண முழு மூச்சுடன் செயற்படுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**பூரட்டாதி 1ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை இருக்கும் பிள்ளைகளிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நன்மைதரும்.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் துணிச்சலுடன் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பீர்கள். பணவரவு திருப்தி தரும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நல்லது. பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும்.

**ரேவதி:** இந்த மாதம் வீண் மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுக்கு உதவப்போய் வீண் பிரச்சினையில் சிக்கி கொள்ளலாம். திடீர் கோபம் ஏற்படும்.



தேவையற்ற வீண் செலவுகளும் உண்டாகும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச் சுமையும் வீண் அலைச்சலும் உண்டாகும்.

**பரிகாரம்:** சிவபெருமானை வணங்கி வர எல்லாக் காரியங்களும் நல்லபடியாக நடக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, புதன், வியாழன்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 11, 12.

**அதிஷ்ட தினங்கள்:** 3, 4, 5, 31 .

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 3

காவியத் தொடர் 551





உடனே தலைமைப் பிக்கு இளவரசர் அருகிலே நெருங்கி ஒரு கையினால் அவரை அணைத்துத் தூக்கினார். சேந்தன் அமுதன் இன்னொரு பக்கத்தில் இளவரசரைப் பிடித்துக் கொண்டு உதவினான். எல்லாரும் படிகளில் ஏறிச் சென்றார்கள்.

'இதோ, இன்னும் சில விநாடி நேரத்தில் படிக்கட்டு முழுவதும் ஏறிவிடுவார்கள். கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசிப்பார்கள். பிறகு கதவு சாத்தியாகிவிடும். சாத்தினால் சாத்தியதுதான். அப்புறம் அவரைப் பார்க்க முடியாது.

பூங்குழலி எதிர்பார்த்தபடியே நடந்தது. மாடிப் படி ஏறியதும் கதவு திறந்தது. சேந்தன் அமுதனை மட்டும் வெளியில் நிறுத்தித் தலைமைப் பிக்கு ஏதோ கூறினார். பிறகு திறந்த கதவு வழியாக எல்லாரும் பிரவேசித்தார்கள்.

கதவு படார் என்று சாத்திக்கொண்டது. அது பூங்குழலியின் இதயமாகிய கதவையே அடைப்பது போலிருந்தது.

"இனி இந்தப் பிறவியில் இளவரசரைப் பார்க்கலாம் என்ற நிச்சயமில்லை. அடுத்த ஜன்மத்திலாவது அத்தகைய பாக்கியம் தனக்குக் கிடைக்குமா?" இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே இளவரசர் மறைவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் பூங்குழலி.

### பதினோராம் அத்தியாயம்
### கொல்லுப்பட்டறை

வந்தியத்தேவன் குதிரையைத் தட்டி விட்டான். பழையாறையைக் குறியாக வைத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தான். பழையாறையிலிருந்து வந்த பாதை ஒருவாறு ஞாபகம் இருந்தபடியால் யாரையும் வழிகூடக் கேளாமல் உத்தேசமாகத் திசை பார்த்துக் கொண்டு சென்றான். முதலில் கொஞ்ச தூரம் காட்டுப் பாதை வழியே சென்றான். குதிரை இதனால் மிகவும் கஷ்டப்பட்டுப் போனதை அறிந்தான். வல்லவரையனுக்கும் களைப்பு அதிகமாகவே இருந்தது. அவன் சிறிது நேரமாவது அயர்ந்து தூங்கிப் பல தினங்கள் ஆகிவிட்டன. அவ்வப்போது கண்ணை மூடிக்கொண்டு ஆடி விழுந்ததைத் தவிர நிம்மதியாக ஓரிடத்தில் படுத்துத் தூங்கினோம் என்பது கிடையாது. பழையாறைக்குப் போய் இளவரசியிடம் செய்தியைச் சொல்லிவிட்டால், அப்புறம் அவனுடைய பொறுப்புத் தீர்ந்தது நிம்மதியாகத் தூங்கலாம். வெகு நேரம் தூங்கலாம் ஏன், சென்று போன தினங்களுக்கும் சேர்த்து நாள் கணக்கில் தூங்க வேண்டும் என்று திட்டமிட்டான்.

இளவரசி குந்தவையிடம், "தாங்கள் கூறிய பணியை நிறைவேற்றிவிட்டேன்" என்று சொல்லும்போது தனக்கு ஏற்படக் கூடிய மகிழ்ச்சியை அவன் எண்ணிப் பார்த்தான். தேவியின் முகம் அதைக் கேட்டு எவ்வண்ணம் மலர்ந்து பொலியும் என்பதையும் நினைத்தான். அந்த நினைவு அவனுக்கு ரோமாஞ்சனம் உண்டு பண்ணியது.

இன்னொரு விடயமும் அவனுக்கு நினைவு வந்தது. காஞ்சியிலிருந்து புறப்பட்டதிலிருந்து எத்தனை பொய்யும் புனை சுருட்டும் அவன் சொல்லியிருக்கிறான்? அவசியம் நேரிட்டதனால்தான் கூறினான். ஆயினும் அதையெல்லாம் நினைக்கும் போது அவனுக்கு உள்ளமும் உடலும் குன்றிப் போயின. இளவரசர் அருள்மொழிவர்மரோடு சிறிது காலம் பழகியதனால் அவனுடைய மனப்போக்கே மாறிப் போயிருந்தது. இராஜரீக காரியங்களில் ஈடுபடுகிறவர்களுக்குச் சாணக்கிய தந்திரங்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று அவன் கருதியிருந்தான். அத்தகைய இராஜரீக தந்திரங்களின் மூலமாக அவனுடைய முன்னோர்கள் இழந்துவிட்ட ராஜ்யத்தைத் திரும்பிப் பெறலாம் என்ற ஆசையும் அவனுக்கு இருந்தது. அந்த எண்ணமெல்லாம் இப்போது மாறிவிட்டது. இளவரசர் அருள்மொழிவர்மரின் நேர்மையையும், சத்திய தீரத்தையும் பார்த்த பிறகு அவனுக்குப் பொய், புனை சுருட்டுகளில் வெறுப்பே உண்டாகிவிட்டது.


அவரைக் காப்பாற்றுவதாக எண்ணிக் கொண்டு மந்திரவாதியின் காது கேட்க நேற்றிரவு அவன் கூறிய பொய்யையும் எண்ணிக் கொண்டான்.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### அன்பா செல்வமா வெற்றியா சிறந்தது?



ஒரு ஊரில் குமரன் தன் தாய் தந்தையுடன் வசித்துவந்தான். அப்போது அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள்வந்து உள்ளே வரலாமா என்று கேட்டனர். தந்தை 'வாருங்கள்' என்றார்.

நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது யாராவது ஒருவர் தான் வரமுடியும் என் பெயர் பணம் இவர் பெயர் வெற்றி இவர் பெயர் அன்பு எங்கள் மூவரில் ஒருவர் தான் ஒரு வீட்டிற்குள் செல்ல முடியும் எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள்' என்றார் பணம் எனப்படுபவர்.

குமரனின் தந்தை வெற்றியை அழைக்கலாம் நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம்' என்றார்.

ஆனால் குமரனோ அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம் நம்மிடம் பணம் சேர்ந்து விட்டால் எல்லாவற்றையும் வெற்றி உட்பட அனைத்தையும் வாங்கலாம் என்றான்.

ஆனால் குமரனின் தாயோ வேண[illegible] அன்பையே அழை[illegible]கலாம். அன்பு தான் முக்கியம் என்றாள். பின் மூவரும், அன்பு உள்ளே வரட்டும் என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும் பணமும் கூட உள்ளே நுழைந்தனர்.

உடன்குமரனின்அம்மா அன்பை மட்டும் தானே உள்ளே அழைத்தோம் என்றார்.

அன்பு சொன்னார் நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால் மற்ற இரு [illegible] திருப்[illegible]

ஆனால் அன்பான என்னை வரச் சொன்னதால்.. நான் இருக்கும் இடத்தில் தான் பணமும், வெற்றியும் இருக்கும்.. ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர்' அன்பு உள்ளம் இருந்தால்.. நம் வாழ்வில் வெற்றியும் தேவையான வசதிகளும் தானாகவே வந்துவிடும்.

அன்பே சிவம் அன்பே முக்கியம். இதையே வள்ளுவர்,

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்.

இல்லையேல், அது வெறும் எலும்புத் தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால்.. அன்பு மனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தடைக்கற்களை உடைப்பதில் நேரத்தை வீணடிக்காது, அதை குதித்துத் தாண்டி முன்னேறிச் செல்லுங்கள்.
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொருத்தமற்ற தீர்மானங்கள் எதிர்விளைவை ஏற்படுத்தும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் யார்? என்ற கேள்விக்கு இன்று பதில் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

பரவாயில்லை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கின்ற தமிழ்ப் பொது வேட்பாளர் என்பவர் தனது தனிப்பட்ட செல்வாக்கினால் பெறக்கூடிய வாக்குகள் ஒப்பீட்டளவில் மிகச் சொற்பம் எனலாம்.

ஆகையால் பொது வேட்பாளர் என்ற விடையை அறிந்து கொள்வதனால் பெரிய தாக்கம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இருந்தும் தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிக்காவிட்டாலும் தமிழ் மக்களின் எதிர்ப்புக்குரிய ஒருவர் பொது வேட்பாளராக நிறுத்தப்படுவாராக இருந்தால், அது தமிழ் மக்கள் மத்தியில் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தும் என்பதோடு பொது வேட்பாளர் என்ற விடயம் ஒருபுறமிருக்க,

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைத் தெரிந்தெடுத்து அவருக்குக் கட்டுப்பணம் செலுத்தி அவரை வேட்பாளராக்கி விடுவதோடு சம்பந்தப்பட்டவர்களின் கடமை முடிந்துவிட்டதெனக் கருதப்படுமாயின், அங்குதான் தமிழினத்துக்கு மிகப்பெரும் பாதகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

ஆம், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக சம்பந்தப்பட்டவர்கள் கடும் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும்.

எனினும் அவ்வாறான பிரசாரம் நடக்குமா? என்பது கேள்விக்குரியதே.

அதாவது, தமிழ்ப் பொது வேட்பாளரை பொதுக் கட்டமைப்புத் தெரிவு செய்கிறது.

பொதுக்கட்டமைப்பு என்பது குறிப்பிட்ட தமிழ் அரசியல் கட்சிகளையும் குறித்த சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் கொண்டமைந்தது.

இவ்வாறு அரசியல் தரப்புகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளருக்காகக் கடும் பிரசாரம் செய்வார்களா? என்றால் அதற்கான பதில் மௌனமாகவே இருக்கும்.

இதை இன்னும் தெளிவாகக் கூறுவதாயின், தேர்தல் பிரசார காலங்களில், நமக்கென்ன என்ற மனநிலை ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

தவிர, அவரவர் தத்தம் பிரசாரக் கடமைகளை ஒழுங்காகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுகை பெறும்.

அதேநேரம் தென்பகுதி வேட்பாளர்கள் தமிழர் பிரதேசத்தில் முன்னெப்போதும் இல்லாத பிரசாரத்தை மேற்கொள்வர். அதிலும் பல்வேறு உறுதிமொழிகளை வழங்குவர்.

இங்குதான் தமிழ்ப் பொது வேட்பாளர் தரப்பு பேசாமல் இருக்க, தென்பகுதி வேட்பாளர்கள் பிரசாரப் பீரங்கித் தாக்குதல் நடத்த, வாக்களிப்புத் தொடர்பில் தமிழ் மக்கள் தாமாக முடிவெடுப்பர்.

இந்த நிலைமையானது, தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அவர்கள் சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக வருவதையே விரும்புகின்றனர் என்பதான நிலைமையைத் தோற்றுவிக்கும். கவனம்.

# ஜே.வி.பி தலைவர் அநுரவிடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் தயார்

## விஜித ஹேரத் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை அநுரவிடம் ஒப்படைக்க மக்கள் தயாராகவே இருக்கிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திசாநாயக்கவினது ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தினைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலுக்காக எமது கட்சியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்கவிற்காக நாம் அனைவரும் வந்து கட்டுப்பணத்தை வைப்புச் செய்தோம். 15 ஆம் திகதி வேட்பு மனுவை ஒப்படைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம்.

எமது நாட்டைப் பொருளாதார ரீதியாக சீரழித்து ஊழல்மிக்க, கீழ்த்தரமான, அசிங்கமான அரசியலை முன்னெடுத்து வந்த யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை கொண்ட அரசியலை வெற்றிபெற செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நாட்டின் பெரும்பான்மை மக்கள் இந்த தினம் வரும் வரை வழி மேல் விழிவைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நிலவுகின்ற அரசியல் கலாச்சாரத்தை மாற்றியமைத்து நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டெடுக்கின்ற வேலைத்திட்டத்தை கொண்டுள்ள அநுரவிடம் நாட்டை ஒப்படைக்க தயாராக இருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களின் வாக்குகளால் அநுரவிடம் நாட்டை ஒப்படைக்கத் தயார். இந்த செய்தியை நாங்கள் இந்த சந்தர்ப்பத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் கொடுக்கிறோம் என விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 17, 143, 354 பேர்

## ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக 2024 வாக்காளர் பட்டியலின் படி பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 17,143,354 ஆகும்.

அதில், அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்களைக் கொண்ட மாவட்டமாக கம்பஹா பதிவாகியுள்ளது.

அதன்படி, கம்பஹா மாவட்டத்தில் 1,881,129 வாக்காளர்கள் பதிவாகியுள்ளனர்.

17 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட கொழும்பு மாவட்டம் இரண்டாவது இடத்தையும், 14 இலட்சத்துடன் குருநாகல் மாவட்டம் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.

வன்னி தேர்தல் தொகுதியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையாக 86,889 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

## பதவி விலகினார் நாமல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் இருந்து பதவி விலகியுள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இது தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வெற்றிடமாக உள்ள குழு பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ, இது வரை காலமும் சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக செயற்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வு பத்தரமுல்ல நெலும் மாவத்தை கட்சியின் தலைமையகத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெலும் பொக்குண அரங்கில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிகழ்வுக்கு அனுமதி கிடைக்காததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ம-7)

## 48 பாடசாலைகளுக்கு நீர் வசதி இல்லை

### கல்வி அமைச்சர் சுசில்

நாடு முழுவதிலும் நீர் வசதியற்ற 48 பாடசாலைகளும் மின்சார வசதி இல்லாத 15 பாடசாலைகளும் இனங்காணப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்படி பாதுகாப்பான நீர் வசதி இல்லாத 983 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மின்சாரம் இல்லாத பெரும்பாலான பாடசாலைகளில் நாற்பது அல்லது ஐம்பது குழந்தைகள் இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் மாத்தறையில் சடலமாக மீட்பு

(மாத்தறை)

தெமட்டகொடை தொடருந்து முனையத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த தொடருந்து முனையத்துக்கு அருகில் உள்ள கைவிடப்பட்ட கிணறொன்றிலிருந்து அவரது சடலம் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறையைச் சேர்ந்த 47 வயதுடைய குறித்த நபர், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் காணாமல் போயிருந்த நிலையில் அது தொடர்பில் தொடருந்து முனையப் பணியாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையை அடுத்து, அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## யுக்திய நடவடிக்கை 671 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 671 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 654 ஆண்களும் 17 பெண்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 12 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 07 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 238 கிராம் 845 மில்லி கிராம் ஹெரோயின், 309 கிராம் 409 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 424 கிராம் 693 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
## கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

03

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | 1 |

படம் -1

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | 2 |
| 3 | இஇஇஇஇஇ | | 1 |

படம் -2

படம் 1,2,3 இல் காட்டப்பட்ட முறைகளே சரியான முறைகளாகும். ஆனால் வாக்காளர்கள் சரியான அறிவைப் பெற்றிராத காரணத்தால் அவர்கள் வெவ்வேறு முறைகளில் தங்கள் விருப்பங்களைத் தெரிவிக்கிறார்கள். இவ்வாறான சில சந்தர்ப்பங்களைப் படங்கள் 4,5 காட்டுகின்றன.

படம் 4 ஐப் பார்க்கும்போது இங்கு புள்ளடி (X) முதலாவது விருப்பமாக முன்னர் கருதப்பட்டது. கடந்த தேர்தலில் அது செல்லுபடியாகதாக கருதப்பட்டது. மேலும் விருப்பங்கள் சரியான நிரல்களுக்குள் போடப்படாவிட்டாலும் (படம் 5) தெளிவாகக் காட்டப்பட்டிருந்தால் அது செல்லுபடியான வாக்காக கணக்கில் எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | X |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | |

படம் -4

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ 2 | | |
| 3 | இஇஇஇஇஇ | 1 | |

படம் -5

வாக்காளர்கள் தங்கள் விருப்பங்களை படங்கள் 6,7,8,9 போல் தெரிவிப்பின் அவை கணக்கில் எடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டுவிடும். (படம் 6இல், புள்ளடி ஆனது 1 எனக்கருதப்படவில்லை)

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | 2 |
| 3 | இஇஇஇஇஇ | | 3 |
| 4 | ஈஈஈஈஈஈஈ | | |
| 5 | உஉஉஉஉஉஉ | | X |
| 6 | எஎஎஎஎஎஎ | | |

படம் -6

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | X |
| 3 | இஇஇஇஇஇ | | 1 |

படம் -7

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | 2 |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | |
| 3 | இஇஇஇஇஇ | | 3 |
| 4 | ஈஈஈஈஈஈஈ | | |
| 5 | உஉஉஉஉஉஉ | | 1 |
| 6 | எஎஎஎஎஎஎ | | |

படம் -3

இலக்கம் 1 உம் மற்றும் புள்ளடியும் முதலாவது விருப்பத்தை தெரிவிப்பதால் வாக்குச்சீட்டு படங்கள் 6, 7, 8 நிராகரிக்கப்படும். இங்கு இரண்டு வேட்பாளர்களுக்கு முதல் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. படம் 9 நிராகரிக்கப்படுவதற்குக் காரணம் முதலாவது விருப்பம் தெரிவிக்காமல் 2ஆவது 3ஆவது விருப்பம் தெரிவிக்கமுடியாது. இவ்வாறு வேறுபல சந்தர்ப்பங்களிலும் வாக்காளர்கள் அளித்த வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன.

### ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்

இலங்கைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேல் பெற்றவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார்

வேட்பாளர்கள் 3 அல்லது 3இற்கு மேல் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் 50 சதவீத வாக்குகளை வேட்பாளர் எவரும் பெறாத நிலை ஏற்படின் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் அதற்கு அடுத்தபடியாகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் தவிர்ந்த ஏனைய வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவர்.

இவ்வாறு நீக்கப்பட்ட போட்டியாளர்கள் பெற்ற வாக்குகளில் அவ்வாக்குகளை அளித்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | 2 |
| 3 | இஇஇஇஇஇ | | 1 |
| 4 | ஈஈஈஈஈஈஈ | | |
| 5 | உஉஉஉஉஉஉ | | X |
| 6 | எஎஎஎஎஎஎ | | |

படம் -8

| | | | |
|---|---|---|---|
| 1 | அஅஅஅஅஅ | | |
| 2 | ஆஆஆஆஆஆஆ | | 2 |
| 3 | இஇஇஇஇஇ | | 3 |
| 4 | ஈஈஈஈஈஈஈ | | |
| 5 | உஉஉஉஉஉஉ | | |
| 6 | எஎஎஎஎஎஎ | | |

படம் -9

யாராவது கூடுதலான வாக்குகளைப் பெற்ற 1ஆம் மற்றும் 2ஆம் வேட்பாளர்களை தமது 2ஆம் விருப்பாகத் தெரிவுசெய்திருந்தால் அந்த வாக்குகள் தற்போது போட்டியில் நிற்கும் வேட்பாளருக்குரிய வாக்குகளாக எண்ணப்பட்டு பதியப்படும். இக் கணிப்பீட்டின்படி பின்பும் 50% பெறாவிடின் மேற்படி முறையில் 3ஆம் விருப்பு வாக்குகள் கணிக்கப்படும்.

இறுதியில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இலங்கையில் இதுவரையில் நடந்த ஜனாதிபதி தேர்தல்களில் இப்படி ஒரு கணிப்பிடல் நடைபெறவில்லை. காரணம் முதலாவது தடவையிலேயே 50 சதவீதற்கு மேலான வாக்குகளை ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் பெற்றுவிடுகிறார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் 32ஆம் உறுப்புரையின் 1ஆம் பந்திக்கிணங்க பிரதம நீதியரசரின் முன்னிலையில் அல்லது அந்நீதி மன்றத்தின் வேறு எவரேனும் நீதிபதியின் முன்னிலையில் சத்தியம் செய்து கீழ் ஒப்பிடுவதன் மேல் பதவியேற்றுக் கொள்வார்.

### 1 ஆவது ஜனாதிபதித் தேர்தல் -1982

இலங்கை அரசியல் வரலாற்றில் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982.10.20ஆம் திகதி நடைபெற்றது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினூடாக 6 வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

திரு. ஜே.ஆர். ஜயவர்தன (ஐக்கிய தேசியக் கட்சி) திரு. ஹெக்டர் கொப்பேகடுவ (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி) திரு. ரோஹன விஜயவீர (மக்கள் விடுதலை முன்னணி)

திரு. கொல்வின் ஆர்.டி. சில்வா (லங்கா சமசமாஜக் கட்சி) திரு. வாசுதேவ நாணயக்கார (நவ சமசமாஜக் கட்சி) திரு. குமார் பொன்னம்பலம் (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்).

இத்தேர்தலில் 1) ஹேவாலயாகே கீர்த்திரத்தின 2) முதியான்சே தென்னகோன் 3) திருமதி நீனா கெதரின் ஏஞ்சலா பெரேரா விஜேசூரிய ஆகியோரும் சுயேட்சை வேட்பாளர்களாக நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தனர். இருப்பினும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய இவர்களின் நியமனப் பத்திரங்கள் தேர்தல் ஆணையாளரினால் நிராகரிக்கப்பட்டன.

ஜே. ஆர்.ஜெயவர்த்தன 3,450,811 வாக்குகளை அதாவது 52.91 சதவீத வாக்குகளை பெற்றதினால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக 1983 பெப்ரவரி 04ஆம் திகதி மீளவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

### ஜனாதிபதி வேட்பாளராக குட்டிமணியை தெரிவு செய்ய வேண்டும்

1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக குட்டிமணியை தெரிவு செய்ய வேண்டும் என்கிற அழுத்தம் தமிழர் விடுதலை கூட்டணிக்குள் எழுந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 இந்திய...

குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மீனவர்கள் பயன்படுத்திய இரு படகுகளும் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இளம் ஆசிரியர்...

குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் சென்றவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய நேற்றுக் காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, வேப்பங்குளம் 60 ஏக்கர் பகுதியில் வசிக்கும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியரான கிருஷன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் குறித்த ஆசிரியரின் துவிச்சக்கரவண்டி, பாதணி, குடை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## மன்னாரில்...

தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட சுயாதீன விசாரணைக் குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் சம்பவ தினத்தின்போது சிலர் தவறிழைத்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவரைத் தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவமானது கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் பட்டப் படிப்பை நிறைவு செய்த மரியராஜ் சிந்துஜா (வயது - 27) எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்தப்போக்கே காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

குறித்த மரணம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சினால் சுயாதீன விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

குறித்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளது. விசாரணைகளின் அடிப்படையில் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக்குழு ஒன்று மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். (ம-7,285)

## யாழ் - காங்...

எது.

எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறித்த துறைமுகத்தை 30 வருடங்களுக்கு செயற்படுத்த இந்தியா முயற்சித்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில், காங்கேசன்துறை துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசாங்கம் கடன் வழங்க எண்ணியது. எனினும், தற்போதைய பொருளாதார நிலை காரணமாக இலங்கையில் திட்டங்களை முன்னெடுப்பதில் இந்தியா தனது கவனத்தை மாற்றியுள்ளது.

எவ்வாறாயினும், இந்தியாவின் மானிய உதவியின் கீழ் குறித்த துறைமுக அபிவிருத்திக்கான முன்மொழிவுக்கு இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியது.

ஆரம்ப கால முன்மொழிவுகளின் படி ஒரு இந்திய கட்டமைப்பாளர் ஒருவர் குறித்த திட்டத்தை நிறைவேற்றுவார் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர், இந்தியா 30 ஆண்டுகளுக்கு அதன் வணிகச் செயற்பாடுகளை முன்னெடுக்க முயன்றதாக குறிப்பிட்டுள்ளார்.

“எவ்வாறாயினும், குறித்த விடயம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை,” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மாகாண சபைத்...

வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் செய்துள்ள பரிந்துரைகளைச் சட்டமூலத்தில் திருத்தங்களாகச் செய்வதற்காக அது பாராளுமன்றத்தின் சட்டங்களுக்கான நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படவுள்ளது.

அந்தவகையில், நிலையியற் குழுவின் திருத் தங்களோடு பெரும்பாலும் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் அது மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று (நேற்று) இரண்டாம் வாசிப்புக்காக அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, விமல் வீரவன்ஸ எம்.பி. மட்டும் அதற்குத் தம் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் அரசியல் நோக்கங்கொண்ட நடவடிக்கை இது என விமல் வீரவன்ஸ விசனம் தெரிவித்தார். (ம-7)

## தேர்...

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு இதுவரை 68 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு இதுவரையில் 31 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.(ம-7)

## கந்தர்மடத்தில்...

உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கந்தர்மடம் பழம் வீதிக்கும் அரசடி வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் கம்பத்துடன் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 5557 — W 8 9 2 9 9 9 — அத சம்பத W 2 9 9 9 — சீட்டிழுப்பு இலக்கம் 132

தன நிதானய — திகதி - 2024.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் - 1587 — R 07 13 16 25 R — Double Chance 69250

மெகா பவர் — திகதி 06/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1905 — W 02 21 50 72 79 — 98934

லக்கி 7 VIP — திகதி 2024.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0383 — W 6 4 0 0 0 6 W

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3799 — சீட்டிழுப்பு திகதி 06.08.2024 — B 18 53 55 61 — B 17356

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0866 — மகரம் 15 24 39 46 மகரம் — 74357 — 25

உத்தியோகபூர்வ முடிவுகள் — 06.08.2024 — வெற்றி வாரம் 265 — சிவப்பு — T 3 1 5 5 3 5 — 42309 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,086,548.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2531 — வர்ணம் வெளிர் நீலம் — சீட்டிழுப்பு திகதி 06.08.2024 — தினம் செவ்வாய் — 08 42 56 57 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,395,052.00

சனிதா — திகதி 2024.08.06 — வெற்றி வாரம் 4692 — வர்ணம் பச்சை — 10 17 38 61 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,596,334.80 — 59388

சசிரி — வெற்றி வாரம் 512 — 2024.08.06 — 09 38 39 — 07 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,756,280/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4243 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2024.08.06 — தினம் செவ்வாய்க்கிழமை — 31 56 58 62 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,437,577.60 — 127897

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — S 07 24 38 42 44 — 1707 — 06.08.2024 செவ்வாய் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 537,455,405.00

அத கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் : 2357 — சீட்டிழுப்பு திகதி : 2024.08.06 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,567,035.20 — 09 10 26 29 J — 666300


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ்மா அதிபர் விவகாரம் சட்டமா அதிபரிடம் அபிப்பிராயம் கோரிய சபாநாயகர் மகிந்த யாப்பா

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவிடம் அபிப்பிராயம் கோரியுள்ளார்.

அண்மையில் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றுவதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்த உயர் நீதிமன்றம், பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுகுறித்து சபாநாயகரும், பிரதம நீதியரசரும் கலந்துரையாடி தீர்வு காணவேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியிருந்த நிலையில், அதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் பிரதம நீதியரசருடன் கலந்துரையாட முடியாது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார்.

இருப்பினும் சிக்கல் அடைந்திருக்கும் பொலிஸ்மா அதிபர் விவகாரத் துக்கு முறையாகத் தீர்வு காண்பதற்கான சட்ட நுணுக்கங்கள் தொடர்பில் சபாநாயகர் சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவிடம் அபிப்பிராயம் கோரியுள்ளார்.(ம-7)

# ஊர்காவற்துறை நீதிமன்றால் 19 இந்திய மீனவர்கள் விடுதலை

கடந்த ஜூன் 22ஆம் திகதி இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்ட 22 மீனவர்களில் 19 பேர், ஆறு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 24 மாத சிறைத் தண்டனை என்ற அடிப்படையில் ஊர்காவற்துறை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன் படகோட்டிகள் மூவரும் தலா 40 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் 1 வருட கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அதேவேளை, ஜூலை 23ஆம் திகதி கைதான 9 மீனவர்கள் ஏற்கனவே ஒருதடவை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், குற்றப்பத்திரிகை இரண்டாவது தடவையாகவும் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்தும் இம்மாதம் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 10.08.2024)
(AA 2, AA 3 - 24.08.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (10.08.2024)
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (14.09.2024)
Certificate Course in English
Further Details : Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-935)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(231)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0944)

வங்கி மீதி வசதி (Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(230)

அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241
(C-0944)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0944)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
• Visit visa
• Student visa
• Fixed & saving
• லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759
(216)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-945)
076 825 7716 (ஆகாஸ்)

வாடகைக்கு வீடு தேவை
நல்லூர் ஆலயத்திற்கு 1 KM அருகாமையில் இருக்கும் முத்திரை சந்தி, கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி போன்ற இடங்களில்
பெரிய மண்டபம் (Hall) உள்ள 4,5 அறைகள் உள்ள, வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதி உள்ள வீடு ஒன்று நிறுவனம் ஒன்றுக்கு தேவையாக உள்ளது.
தொடர்பு:- 077 224 2401
(1636)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 23 - 05 - 1978

மறைவு 08 - 07 - 2024

கடந்த 08.07.2024 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் மன்மதராசன் சாரதா

யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மன்மதராசன் சாரதா அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
நெடுங் காலம் இருப்பீர்கள்.

எமது இல்லத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் தெரிவித்தவர்கள், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையங்கள் வைத்தவர்கள், தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்கள் பதாதைகள் மூலம் அஞ்சலி வெளியிட்டவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், உள்ளூர், வெளியூர்களில் இருந்து ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-946)

வெற்றி மஹால், வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.
077 615 2390
தகவல்: குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 08.07.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சின்னப்பொடியன் இராசதுரை

அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று 07.08.2024 புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

சர்வோதயா வீதி,
...கால் மேற்கு.
(1646)
இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.